# January 3, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. டாடா எலெக்ட் ரானிக்ஸ், ஃபாக்ஸ்கான், சாம்சங், டிக்ஸன் உள்ளிட்ட நிறுவனங்களின் ரூ.41,863 கோடி மதிப்பீட் டிலான மின்னணுப் பொருள்கள் உற்பத்தி செய்யும் 22 திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்ததாக மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

(i) சர்வதேச அளவில் இந்தியாவை மின்னணுப் பொருள்கள் உற்பத்தி மையமாக்கும் திட்டத்தின் கீழ் இப்போது மூன்றாவது முறையாக புதிய திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 33,791 புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்; ரூ.2,58,152 கோடி மதிப்பிலான பொருள்கள் உற்பத்தி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நுட்பமான மின்னணுப் பொருள்களுக்கு இறக்குமதியை இந்தியா சார்ந்திருப்பது குறையும். இத்துறையில் இந்தியாவின் ஏற்றுமதி வெகுவாக அதிகரிக்கும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

(ii) இதில் அமெரிக்காவின் ஆப்பிள் நிறுவனத்துக்கு உதிரி பாகங்களை வழங்கும் மதர்ஸன் எலெக்ட்ரானிக்கம்போனன்ட்ஸ், டாடா எலெக்ட்ரானிக்ஸ், ஏடிஎல் பேட்டரி டெக்னாலஜி இந்தியா, ஃபாக்ஸ்கான் (யூஸான் டெக் இந்தியா), ஹிண்டால்கோ ஆகியவை மூலம் அதிக முதலீடும், வேலைவாய்ப்பும் உருவாக இருக்கிறது.

(iii) இப்போது அனுமதிக்கப்பட்டுள்ள 22 திட்டங்கள் மூலம் தமிழ்நாடு, ஆந்திரம், ஹரியாணா, கர்நாடகம், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், உத்தரபிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் ஆலைகள் உருவாக்கப்பட உள்ளன. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலான வளர்ச்சியையும் இது உறுதி செய்யும்.

2. ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கில் ரூ.7,295 கோடியில் இரு திட்டங்களை மத்திய அரசு அறிவித்தது.

(i) அதன்படி ரூ.5,181 கோடியில் வட்டி மானியத் திட்டமும் ரூ.2,114 கோடியில் கடன் உத்தரவாதத் திட்டமும் 2031 வரையிலான 6 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படவுள்ளது.

(ii) கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ரூ.25,060 கோடி மதிப்பிலான ஏற்றுமதி ஊக்குவிப்புத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் முதல்கட்டமாக சந்தை அணுகலை மேம்படுத்த கடந்த டிச.31- ஆம் தேதி ரூ.4,531 கோடியை மத்திய அரசு விடுவித்தது. இதைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக இந்த இரு திட்டங்களையும் மத்திய அரசு கொண்டுவந்துள்ளது.

(iii) இதுகுறித்து மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'ஏற்றுமதியை ஊக்குவிக்க ரூ.5,181 கோடியில் வட்டி மானிய திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. அதன்படி தகுதி வாய்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தர (எம்எஸ்எம்இ) ஏற்றுமதி நிறுவனங்களுக்கு 2.75 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. ஒரு நிறுவனத்துக்கு ஆண்டுக்கு ரூ.50 லட்சம் உச்சவரம்பு நிர்ணயிக்கப்படுகிறது.

(iv) உள்நாட்டு மற்றும் சர்வதேச பண மதிப்புக்கேற்ப இத்திட்டத்துக்கான வட்டி விகிதம் மார்ச் மற்றும் செப்டம்பர் என ஆண்டுக்கு இருமுறை சீராய்வு

செய்யப்படவுள்ளது.

(v) இதற்கான விரிவான நடைமுறைகள் விரைவில் வெளியிடப்படவுள்ளது. இதை சோதனைத்திட்டமாக முதலில் அறிமுகப்படுத்திய பிறகு திருத்தங்களுடன் முழுமையாக செயல்படுத்தப்படவுள்ளது.

(vi) கடன் உத்தரவாதத் திட்டம்: ஏற்றுமதி கடன்களுக்கு உத்தரவாதம் அளிக்க ரூ.2,114 கோடி நிதி ஒதுக்கப்படுகிறது. இதன்கீழ் ஏற்றுமதியுடன் தொடர்புடைய ஒரு எம்எஸ்எம்இ-க்கு அதிகபட்சமாக ஆண்டுக்கு ரூ.10 கோடி வரை கடனுக்கான உத்தரவாதம் அளிக்கப்படுகிறது. குறு மற்றும் சிறு ஏற்றுமதி நிறுவனங்களுக்கு 85 சதவீதமும் நடுத்தர ஏற்றுமதி நிறுவனங்களுக்கு 65 சதவீதமும் கடன் உத்தரவாதம் வழங்கப்படுகிறது. இந்த இரண்டு திட்டங்களின்கீழ் சில குறிப்பிட்ட பொருள்களை மட்டுமே ஏற்றுமதி செய்ய முடியும். பாதுகாப்பு மற்றும் சிறப்பு வாய்ந்த ரசாயனங்கள், நுண்ணுயிரினங்கள், பொருள்கள், சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை இதில் ஏற்றுமதி செய்யலாம். தடை செய்யப்பட்ட, கழிவுகள் மற்றும் வீணான பொருள்கள், உற்பத்தி தொடர்புடைய ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் ஏற்கெனவே உள்ள பொருள்களுக்கு இந்தச் சலுகைகள் பொருந்தாது' எனத் தெரிவிக்கப்பட்டது.

3. வெனிசுலா அதிபர் - நிக்கோலாஸ் மதுரோ

4. ஈரானில் நிலவும் பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வுக்கு எதிராகத் தொடங்கிய போராட்டங்கள் நாட்டின் கிராமப்புற மாகாணங்களுக்கு பரவி தீவிரமடைந்துவரும் நிலையில், பாதுகாப்புப் படையினர், போராட்டக்காரர்கள் உள்ளிட்ட 7 பேர் உயிரிழந்துள்ளனர்.இது குறித்து ஈரான் உள்துறை அதிகாரிகள் தெரிவித்ததாவது - நாடு முழுவதும் நடைபெற்றுவரும் போராட்டங்களின்போது 4 நகரங்களில் 5 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் பெரும்பா லோர் லூர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

(i) ஈரான் அணுசக்தி திட்டங்களுக்கு எதிராக அந்த நாட்டின் மீது அமெரிக்கா தொடர்ந்து விதித்துள்ள பொருளாதாரத் தடைகளால் நாட்டின் பொருளாதாரம் கடும்நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

(ii) ஈரானின் நாணயமான ரியால் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சி அடைந்துள்ளது. 1 அமெரிக்க டாலர் தற்போது 14 லட்சம் ரியால் வரை விலை போகிறது.

(iii) மதிப்பு பணவீக்கம், நாணய வீழ்ச்சி, விலைவாசி உயர்வு மக்களை வெகுண்டெழச் செய்துள்ளதால் இந்தப் போராட்டம் வெடித்துள்ளது. இருந்தாலும், இந்தப் போராட்டம் அரசுக்கு எதிரான போராட்டமாக உருவெடுத்துவருவதாகக் கூறப்படுகிறது.

5.குஜராத் மாநிலம், அகமதாபாதில் தொடங்கியுள்ள சர்வதேச மலர்க் கண்காட்சி இரு கின்னஸ் உலக சாதனைகளைப் படைத்துள்ளது. இது உண்மையிலேயே மிகவும் ஈர்ப்புக் குரியது என்று பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

(i) குஜராத்தின் அகமதாபாதில் உள்ள சபர்மதி நதிக் கரையில் சர்வதேச மலர்க் கண்காட்சி-2026, கடந்த வியாழக்கிழமை (ஜன.1) தொடங்கியது. - முதல்வர்

பூபேந்திர படேல் 2 தொடங்கிவைத்த இக்கண்காட்சி, ஜன.22 வரை நடைபெறவுள்ளது. இதில் பார்வையாளர்கள் வியக்கும் வகையில் வித விதமான வடிவமைப்புகளில் - வண்ணமிகு மலர்ச்செடிகள் - காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

(ii) பூத்துக் குலுங்கும் பல்வேறு வகை மலர்களைக் கண்டுகளிக்க உள்நாடு மட்டுமன்றி வெளிநாடுகளில் இருந்தும் பார்வையாளர்கள் வருகை தருகின்றனர்

(iii) நடப்பாண்டு மலர்க் கண்காட்சியில் மிக பிரம்மாண்டமான மலர்க் கோலமும், சர்தார் வல்லபபாய் படேலின் மிகப் பெரிய மலர் உருவப்ப மும் கவனம் பெற்றுள்ளன. இவை இரண்டும் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளன.

6. இந்திய மகளிர் ஹாக்கி அணியின் தலைமைப் பயிற்சியாளராக நெதர்லாந்தை சேர்ந்த ஜோர்டு மரைன் (51) நியமிக்கப்பட்டார்.

7. ஆபாசமான மற்றும் சட்டவிரோத உள்ளடக்கங்களை, குறிப்பாக 'க்ரோக்' என்ற செயற்கை நுண்ணறிவு செயலி மூலம் உருவாக்கப்படுபவற்றை உடனடியாக நீக்க வேண்டும்' என்று அமெரிக்க தொழிலதிபர் எலான் மஸ்கின் எக்ஸ் சமூக ஊடகத்துக்கு மத்திய அரசு கடுமையான நோட்டீஸைப் பிறப்பித்துள்ளது.

8. நாட்டின் அதிவேக ரயில் இணைப்புக்கான லட்சியமிக்க உள்கட்டமைப்புத் திட்டங்களில் ஒன்றான அகமதாபாத்-மும்பை புல்லட் ரயில் திட்டம், 508 கி.மீ. தொலைவுடையது.

(i) இது குஜராத் மற்றும் தாத்ரா நகர் ஹவேலியில் 352 கி.மீ., மகாராஷ்டிரத்தில் 156 கி.மீ. தொலைவுக்கு அதிநவீன பொறியியல் நுட்பங்களுடன் உலகத் தரத்தில் கட்டமைக்கப்படுகிறது. இதில் 465 கி.மீ. அதாவது 85 சதவீதம் பாலங்களைக் கொண்டதாகும்.

(ii) இதுவரை 326 கி.மீ. தொலைவுக்குப் பணிகள் நிறைவடைந் துள்ளன. புல்லட் ரயில் பயன்பாட்டுக்கு வரும்போது, மும்பை-அகமதாபாத் பயண நேரம் 2 மணி நேரம் 17 நிமிஷங்களாக குறையும்.